சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
OS.No. 1413 / 2022

**வா.சா.1. தங்கப்பாண்டியன் 22.02.2024**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது தாயார் பெயர் திருமலையம்மாள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். எனக்கு காமுத்தாய், பழனியம்மாள், முத்துலெட்சுமி ஆகிய உடன்பிறந்த சகோதரிகள் உண்டு என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு சுயாஜித பாத்திய சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண்.182-ன் மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர் 23 செண்ட் என்றால் சரிதான். புல எண்.182 என்பது 182/1, 182/2, 182/3 மற்றும் 182/4 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து இல்லாமல் எனது தகப்பனாருக்கு புல எண்.184/3-ல் 2 ஏக்கர் 74 செண்ட் பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். புல எண்.179/2ல் 1 ஏக்கர் 5 செண்ட் நிலம் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான் எனது தந்தை மாரியப்ப முதலியார் 1984-ம் ஆண்டு இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். புல எண்.182/1 என்பது எனது தாயாருக்கும் எனது சகோதரிக்கும் பாத்தியப்பட்டதால் இந்த வழக்கில் அந்த சொத்தை பார்க்கவில்லை சேர்க்கவில்லை என்றும் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் உரிமையியல் இறப்பு என்று அறிவிக்கப்பட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.182/1, 182/2 அதில் உள்ள பூமிகள் விவசாய பூமிகள் இல்லை என்றும் அது மானாவரி நிலங்கள் என்று சொன்னால் தவறு. 182/1, 182∴2, 182∴3 மற்றும் 182/4 நிலங்களில் கண்ட பூமிகள் எந்தெந்த இடத்தில் அமைந்துள்ளது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. ஆனால் அனைத்து புல எண்களும் ஒரே தாக்காக உள்ளது. சர்வே எண்.182-ல் எந்த புல எண்ணில் கேணி உள்ளது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. தாவா கேணி யார் வெட்டியது என்று ஞாபகம் உள்ளது என்றால் நாங்கள் நால்வரும் சேர்ந்து தான் வெட்டினேன். புல எண்.182/3-ல் ஒரு கேணி உள்ளது என்றால் சரிதான். அந்த கேணி அனைவரும் முயற்றி செய்து அவர் பெயரில் வெட்டப்பட்டது. நவாடு திட்டத்தில் அப்போது ரூ.30,000 கடன் கொடுத்தார்கள். அதற்கு நான், சக்திவேல் மற்றும் முருகன் அனைவரும் சேர்ந்து தங்கராஜ் கேணி வெட்டுவதற்கு பத்திரம் எழுதி பதிந்து கொடுத்துள்ளோம். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

**(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.02.22 16:27:49 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்